செ. வெ. எண்: 504 நாள்: 25.10.2011.

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் அனைவரும் தேசிய அடையாள அட்டை பெறலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. முனுசாமி, இ. ஆ. ப., அவர்கள் தகவல்.**

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. முனுசாமி, இ. ஆ. ப., அவர்கள் தெரிவிக்கையில், அனைத்து இந்திய குடிமக்களுக்கும் பொதுவான அடையாள அட்டையை வழங்கும் ஆதார்ஷ் திட்டத்தை செயல்படுத்த 2009 ஆம் ஆண்டு " தேசிய தனிச் சிறப்பு அடையாள ஆணையம் " என்ற அமைப்பை மத்திய அரசு ஏற்படுத்தி உள்ளது. இந்த திட்டத்தை செய்படுத்த தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கு பதிவாளராக இந்தியன் ஓவர்சீஸ் செயல்படுகிறது.

இந்த திட்டத்தில் குழந்தைகள் ஊள்ளிட்டு அனைத்து குடிமக்களுக்கும் பண்ணிரண்டு எண்கள் கொண்ட அடையாள அட்டையை இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பொது அடையாள அட்டையின் மூலம் மத்திய / மாநில அரசின் சலுகைகளை நேரடியாக வங்கிக் கணக்குகள் மூலம் பெறலாம். குடும்ப அட்டை, தொலைபேசி மற்றும் அலைபேசி இணைப்பு, சமையல் எரிவாயு இணைப்பு, பாஸ்போர்ட், வாக்காளர் அடையாள அட்டை போன்றவைகளை எளிதில் பெறலாம். அதேபோல் அடையாள அட்டை ஒன்றையே அறிமுகமாக பயன்படுத்தி விரைவில் வங்கி கணக்கை தொடங்கலாம். படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யவும் இந்த அட்டையை பயன்படுத்தலாம்.

தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பம் அனைத்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைகளிலும் கிடைக்கும். விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உருவ புகைப்படம், விரல்கள் மற்றும் கண்களின் புகைப்படம் மற்றும் புர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் ஆகியவற்றை கணினியில் புதிவு செய்து அதற்கான ரசீது வழங்கப்பட்டு, மூன்று மாதத்திற்குள் அடையாள அட்டை வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டை பெற விரும்புவோர் அருகில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையை அனுகலாம். இந்த சிறப்பு அடையாள அட்டை வழங்கும் பணியில் அரசு அலுவலர்கள், மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு விரைவாக பதிவு செய்ய பொது மக்களுக்கு சேவை செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. முனுசாமி, இ. ஆ. ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

செய்தி வெளியீடு :-

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகப்பட்டினம்.